திருவள்ளூர் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை:– திருமதி.G.ராஜலட்சுமி,பி.இ.,

ந.க.எண்.665/2023/எப்1, நாள்.28.04.2023

பொருள்: மனைப்பிரிவு – திருவள்ளூர் நகராட்சி – பெரியகுப்பம் கிராமம் – சர்வே எண். 476/1 PART (வார்டு எண்–B, பிளாக் – 23, நகரளவை எண். 30, 31, 32, 33, 34, 35, 36) – ல் 0.52 ஏக்கர் பரப்பளவு இடத்தில் – குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்துக் கொள்ள இறுதி உத்தரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (Ms) எண்.141, நாள்.16.07.2022.
2. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள்.23.09.2020.
3. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி SWP/DTCP/TVLR/Layout No-33/2023.
4. நகராட்சி பொறியாளர் குறிப்பு நாள்.30.03.2023.
5. இவ்வலுவலக ந.க.எண்.665/2023/எப்1, நாள். 30.03.2023.
6. நகர் மன்ற தீர்மான எண்.441, நாள்.25.04.2023.
7. இவ்வலுவலக ந.க.எண்.665/2023/எப்1, நாள். 26.04.2023.

****

ஆணை:–

திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியகுப்பம் கிராமம் சர்வே எண்.476/1PART (வார்டு எண்–B, பிளாக் – 23, நகரளவை எண். 30, 31, 32, 33, 34, 35, 36) –ல் 0.52 ஏக்கர் பரப்பளவு உள்ள மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகளான குடிநீர் மற்றும் பாதாளசாக்கடை வசதி பணிகளை நகராட்சி மூலம் மேற்கொள்ள **ரூ.04.80 இலட்சம் (ரசீது எண்.014/01/5/23–24/0000134, நாள்.17.04.2023)**–ல் மனுதாரரால் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம் என குறிப்பு பெறப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து நகராட்சிக்கு மேற்குரிய மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க பார்வை 6–ல் காணும் நகர்மன்ற தீர்மானத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மனுதாரரால் இறுதி நடவடிக்கையாக நகராட்சி செலுத்தப்பட வேண்டிய மனைப்பிரிவிற்கு உண்டான உரிய கட்டணங்கள் Online வாயிலாகவும் மற்றும் நகராட்சி கருவூலத்திலும் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

வ.எண்	கட்டணை விவரங்கள்	செலுத்தப்பட வேண்டிய தொகைகள்	ரசீது எண்
1	மனைப்பிரிவு பராமரிப்பு பணிகளுக்காக திரும்ப செலுத்தக்கூடிய வைப்புத்தொகை ஏக்கர் 1–க்கு ரூ.1.00 லட்சம் (0.52 ஏக்கர்)	60,000/–	014/01/5/23–24/ 0000503, நாள்.28.04.2023
2	மனைப்பிரிவு கட்டணம்	25,000/–	014/cp/23–24/0000255, நாள்.27.04.2023
3	மனை உட்பிரிவு கட்டணம் (13 மனைகள் X ரூ.100 மனைக்கு)	1,300/–	
4	மனை அபிவிருத்தி கட்டணம் (2133 Sq.m X Rs.5/Sq.m)	10,700/–	
5	ஆய்வு கட்டணம்	10,000/–	
6	சாலை அங்கீகாரக் கட்டணம்	15,000/–	
7	கொடி நாள் கட்டணம்	5,000/–	014/01/5/23–24/ 0000504, நாள்.28.04.2023
8	காலிமனை வரி	1,19,272/–	014/cv/23–24/0000275, நாள்.28.04.2023 (2017–18 I half year to 23–24 II half year)
மொத்தம்		**2,46,272/–**	

எனவே, மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம், திருவள்ளூர் அவர்களின் தொழில்நுட்ப உத்தரவில் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள இதன் மூலம் உத்தரவு அளிக்கப்படுகிறது. மேலும் தவறான ஆவணங்கள் சமர்பிக்கப்பட்டு இவ்வுத்தரவு பெறப்பட்டு இருப்பின் நிபந்தனை இன்றி மனைப்பிரிவு அனுமதி ரத்து செய்யப்படும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. மேற்காணும் மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர் நகர் ஊரமைப்புத்துறை திருவள்ளூர் அவர்கள் மூலம் மனைப்பிரிவு வரைப்படத்திற்கு தொழில்நுட்ப அனுமதியில் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை மீறாமல் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி2, நாள்.20.01.2022 புதிய மனைப்பிரிவுகளுக்கு அனுமதி அளிக்க பின்பற்றப்பட்ட வேண்டிய திருத்திய நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.
3. தற்போது தங்களுடைய மனைப்பிரிவிற்கான மனைகளுக்கு காலிமனை வரி தங்கள் பெயரில் செலுத்தப்பட்டுள்ளது. தாங்கள் மேற்கண்ட மனைப்பிரிவில் விற்கப்படும் ஒவ்வொரு மனைக்கும் காலிமனை வரி மனை உரிமையாளர்களின் பெயரில் மாற்றம் செய்ய அறிவுறுத்தவும், தவறும் பட்சத்தில் தாங்கள் பெயரிலயே காலிமனைவரி பெயர் தொடர்ந்தால் தாங்களே காலிமனை வரி செலுத்த இயலும் என அறிவுறுத்தப்படுகிறது.

28/4/22

ஆணையர்
திருவள்ளூர் நகராட்சி
28/04/22

பெறுநர்:-

திரு.ரா.வடிவேல் மற்றும் ஐவர்,
எண்.18/62, வள்ளலார் தெரு,
பெரியகுப்பம்,
திருவள்ளூர்–602001.

நகல்:

1. உதவி இயக்குநர் அவர்கள்,
நகர் ஊரமைப்புத்துறை,
திருவள்ளூர்.

2. சார் பதிவாளர் அவர்கள்,
சார் பதிவாளர் அலுவலகம்,
திருவள்ளூர்.